# ஈரான் இஸ்லாமிய குடியரசிற்கு இந்திய துணை குடியரசுத் தலைவரின் பயணம் (மே 22, 2024)

மே 21, 2024

இந்தியாவின் துணை குடியரசுத் தலைவர் திரு. ஜகதீப் தன்கர் அவர்கள் 2024 மே 22 அன்று ஈரான் இஸ்லாமிய குடியரசுக்கு பயணம் மேற்கொள்கிறார். அங்கு 2024 மே 19 அன்று ஒரு துரதிர்ஷ்டவசமான ஹெலிகாப்டர் விபத்தில் உயிரிழந்த ஈரான் இஸ்லாமிய குடியரசின் அதிபர் டாக்டர். செய்யத் இப்ராஹிம் ரைசி, வெளியுறவு அமைச்சர் திரு. ஹுசைன் அமீர்-அப்துல்லாஹியான் மற்றும் பிற ஈரானிய அதிகாரிகளின் துயரமான மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கும் வகையில் அதிகாரப்பூர்வ விழாவில் பங்கேற்கிறார்.

இந்திய குடியரசுத் தலைவர் ஸ்ரீமதி. திரௌபதி முர்மு மற்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் ஈரான் அரசுக்கும் மக்களுக்கும் தங்கள் இரங்கலைத் தெரிவித்துள்ளனர். இந்த துயர இழப்புக்கு இந்தியாவின் இரங்கலை தெரிவிக்க, 2024 மே 21 அன்று புதுதில்லியில் உள்ள ஈரான் இஸ்லாமியக் குடியரசின் தூதரகத்திற்கு இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் வருகை தந்தார். மேலும் 2024 மே 21 செவ்வாய்கிழமை அன்று இந்தியா தேசிய துக்க தினமாக அனுசரிக்கப்படுகிறது.

**புது தில்லி**
**மே 21, 2024**